வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4377/ஆ3/2023 நாள்.15.03.2024

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல் – சார்ந்து

பார்வை : 1.தமிழ்நாடு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலஆணையர் அவர்களின் மாதிரி செய்திகுறிப்பு நாள்.26.12.2023
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்.08.01.2024 மற்றும் 01.02.2024

-----

பார்வை 1இல் காணும் தமிழ்நாடு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அவர்களின் 26.12.2023 நாளிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளவாறு வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சேர்ந்த மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு சார்ந்த மாணவியர்கள் தேசியமயமாக்கப்பட்டவங்கிகள் அல்லது அஞ்சலகங்களில் தமது பெயரில் வங்கி கணக்கு துவங்கி அதனைஆதார்எண்ணுடன் இணைத்தல் வேண்டும். மேலும் மாணவியர்களின் வருமானச் சான்று மற்றும் சாதிச் சான்றிதழ் நகல்களை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சரிபார்த்து அதன் விவரங்களை EMIS இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு பார்வை 2இல் காணும் இவ்வலுலவக 08.01.2024 மற்றும் 01.02.2024 நாளிட்ட செயல்முறைகள் மூலம் அனைத்து அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுநாள் வரை மாணாக்கர்களின் வங்கிக்கணக்கு விவரம் பெறப்படாமல் இருப்பின் உடனடியாக பெற்று அதனை EMIS இணைதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும். 31.03.2024க்குள் சார்ந்த மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை பெற்று வழங்கப்படவில்லை எனில் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களே முழுபொறுப்பேற்க நேரிடும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்துவகை அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளித் தலைமைஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்.
வேலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.